# நீலன் திருச்செல்வம் ரஸ்ட்

**சித்தி திருச்செல்வம் பெண்கள் நட்புறவு நிகழ்ச்சித்திட்டம் 2017**
**விண்ணப்ப அழைப்பு**

## அறிமுகம்

சித்தி திருச்செல்வம் பெண்கள் நட்புறவு நிகழ்ச்சித்திட்டமானது 18 மாத காலப்பகுதிக்குரியது. சமூக மட்டத்தில் வேலை செய்யும் பெண்களின் கொல்திறனை உயர்த்தி குடும்பத்தில், நிறுவனங்களில் மற்றும் சமூகத்தில் படிப்படியாக தலைமைத்துவ பங்கை உயர்த்தவும், மற்றும் அவர்கள் தங்கள் தலையீடுகள் மற்றும் சமூக ஈடுபாடு என்பவற்றை அதிகரிக்க உத்திகள் மற்றும் செயல்முறைகளை பெற்றுக்கொடுக்கவும் முற்படுகிறது. இது மூன்று கட்டங்களை கொண்டுள்ளது: ஒவ்வொன்றும் 7-14 நாட்களுக்கு இடைப்பட்ட அடிப்படை, இடைநிலை மற்றும் உயர்தர நிகழ்ச்சித்திட்டம்,6 மாத இடைவெளிகளில் நடாத்தப்படுகிறது. நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் பங்கேற்பாளர்கள் தங்கள் வேலைதளங்களுக்கு அல்லது சமூகத்துக்கு திரும்பி சென்று தாங்கள் கற்ற விடயங்களை தங்கள் வேளைகளில் இணைத்துக்கொள்ள முடியுமாக காணப்படுகிறது.

நீலன் திருச்செல்வம் ரஸ்ட் என்பது சமூக நீதி, சமாதனம், நல்லிணக்க முயற்சிகளுக்கு ஆதரவளித்துவரும் இலங்கையைச் சேர்ந்த ஒரு மனிதநேய அமைப்பாகும். அஹிம்சை வழிமுறைகள் மூலம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தீவிரமாகச் செயல்பட்டு வந்த இலங்கை சட்டவாக்காளரும், அரசியல் யாப்பு நிபுணரும், சமாதான ஆர்வலரும், ஸ்தாபன நிறுவனருமான கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களால் இந்த நம்பிக்கை பொறுப்பு அவரது பெயரில் 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம்:

பெண்கள் நட்புறவு நிகழ்ச்சித்திட்டமானது நீலன் திருச்செல்வம் நம்பிக்கை பொறுப்பின் முயற்சி. இதன்மூலம் திறம்பட தங்கள் சமூகத்துக்காக பரிந்துபேசக்கூடிய மற்றும் பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில் முடிவெடுப்பதில் சமூகத்தின் பங்களிப்பை உயர்த்தக்கூடிய பெண்கள் தலைமைத்துவ குழுக்களை உருவாக்க விரும்புகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது நீலன் திருச்செல்வம் ரஸ்ட் பெரிய திட்டப்பகுதி. இதன் மூலம் நிருவன மட்டங்களிலும், தனிப்பட்ட நபர்களினதும் மற்றும் சமூகமட்டத்திலான கொள்திரனை உயர்த்த முற்படுகிறது.

குறிப்பாக, இதன் நோக்கம்:

- மனித உரிமை ஆர்வலர்களாக புதிய தலைமுறையில் ஒரு பங்கை வகிப்பதற்கு இளம்பெண்களை ஊக்குவித்தல் மற்றும் அதிகாரமளித்தல்;
- திரட்டுதல், ஒருங்கிணைத்தல், கல்வி, சமூகம் முன்னேற்றம், விழிப்புணர்வு எழுச்சி மற்றும் வாதிடல், பாலின சமத்துவம், சமாதான உருவாக்கம் மற்றும் மனித உரிமைகள் போன்ற விடயங்களில் பயனுள்ள அணித்தலைவராக இளம் பெண்கள் காணப்படுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்குதல்;
- உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சி திட்டங்களில் பங்களிக்க வைப்பதன் மூலம் இளம் பெண்களுக்கு அறிவு மற்றும் ஊக்குவித்தல் ஆதரவு வழங்குதல்;

வெற்றிகரமான விண்ணபத்தாரர்கள் தங்களது தற்போதைய எல்லைகளை விட்டு ஒரு பரந்த சமூகத்துக்கு தாங்கள் படித்த விடையங்களை எடுத்து செல்ல வேண்டும்.

### நட்புறவின் எண்ணிக்கை:

அதிகபட்சமாக 10 பேர் 2017 நட்புறவு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுவார்கள்

### மொழி:

நிகழ்ச்சித்திட்டத்தின் எல்லா 3 கட்டங்களும் தமிழ் மொழியில் நடாத்தப்படும்.

### தகைமை:

a) 18 மற்றும் 35 வயதிற்கு இடைப்பட்டிருத்தல் வேண்டும்
b) மனித உரிமைகள் அல்லது / மற்றும் பாலின சமத்துவம் போன்ற விடயங்களில் வலுவான பேரார்வம், ஆர்வம் மற்றும் தீவிரமாக ஈடுபட்டிருத்தல்
c) ஒரு சமூகம் சார்ந்த அமைப்பின் உறுப்பினராக இருக்க வேண்டும் அல்லது குறைந்தது 3 வருடங்கள் சமூகம் சார்ந்த அமைப்பில் வேலை செய்த அனுபவம் வேண்டும்.
d) 18 மாத காலத்தில நிகழ்ச்சித்திட்டதினால் நிறுவப்பட்ட நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் காலக்கெடுவை உறுதிப்படுத்த வேண்டும் அல்லது/ மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் 3 கட்டங்களிலும் பங்களிப்பதற்கு உறுதியளிக்க வேண்டும், மற்றும் 18 மாத காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை தீவிரமாக அடைய தயாராக இருக்க வேண்டும்
e) வெளிநாடு மற்றும் உள்நாட்டில் பயணம் செய்ய நேரம் மற்றும் விருப்பம் உடையவராக இருக்க வேண்டும்.
f) நிகழ்ச்சித்திட்டதின்போது பெற்றுக்கொண்ட அறிவை சமூகத்தின் உறுப்பினர்கள்/ நிறுவனங்களின் மற்றைய ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ள தயாராக இருக்க வேண்டும்.
g) ஏற்கனவே நடாத்தப்பட்ட முறையான பயிற்சி மற்றும்/ அல்லது திறன் விருத்தி முயற்சி பயிற்சியிகளில் பங்குபற்றாத விண்ணபத்தாரிகள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

## விண்ணப்பிப்பது எப்படி

:பின்வரும் இணையத்தளத்திலிருந்து விண்ணப்பபடிவங்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம் http://neelan.org/download-forms/ (விண்ணப்ப படிவங்களை தரவிறக்கம் செய்வதில் ஏதேனும் பிரச்சனைகளை எதிர்நோக்கினால் அவற்றை மின்னஞ்சல் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கோரி wfp@neelan.org எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்)

## விண்ணப்பத்தின் வழிகாட்டல் மற்றும் சமர்ப்பிக்கும் காலக்கெடுவை:

விண்ணப்பம் கணணியில் தட்டச்சு செய்யப்பட்டு தமிழில் அல்லது ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் முறையாக பூர்த்திசெய்யப்பட்டு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட சகல துணை ஆவணங்களையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் நீலன் திருச்செல்வம் நம்பிக்கை பொறுப்புக்கு 2017 ஆடி 31ம் திகதி அல்லது அதற்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.

மின்னஞ்சல் மூலம்: wfp@neelan.org (தயவு செய்து பொருள் (Subject) என்னும் இடத்தில் "NTT/WFT/2017/உங்களது பெயர்" ஐ இடுக)

தபால் மூலம்: NTT/WFP/2017
Programme Officer,
Neelan Tiruchelvam Trust (NTT),
16/6A, Mohideen Terrace, off Ward Place,
Colombo 7.

## விண்ணப்பதாரர்கள் பெண்கள் நட்புறவு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விசாரணைகளுக்கு

இந்த நிகழ்ச்சி பற்றிய வினாக்கள் wfp@neelan.org என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 0770 025 638 / 0777 670 180 / 0112 690 991